1981 ஜனவரி 27] [திரு. பி. துரைராஜ்]

இந்த தமிழக அரசுக்கு அரிசன பெருங்குடி மக்களின் நிலை பற்றி நான் ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில் சங்கராங்குளம் என்ற கிராமத்திலே எவ்விதமான துன்ப நிலை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டது என்பதைக் குறித்து நாங்கள் புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, அதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டும் என்று கேட்ட நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்களே, அந்த கிராமத்திற்கு விஜயம் செய்து, அந்த உண்மை நிலையை உணர்ந்து, அதற்காக நீதி விசாரணை போட்டு இருக்கிறார்கள். அதற்காக தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்தின் சார்பில் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

மேலும், அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் உண்மை நிலையை எடுத்துச் சொல்லி, அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்பதற்காக ஒரு ஊர்வலம் நடத்திய நேரத்தில் அது சட்ட விரோதமானது என்று கூறி, அந்த அரிசன மக்களின் மீது வழக்குப் போட்டு இருக்கிறார்கள். அந்த வழக்கைப் பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆலோசனை செய்து அதை வாபஸ் பெற ஆணை போடவேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

8. அறிக்கை அளித்தல்

விடுதலைப் போராட்ட வீரர்களின் ஓய்வூதியத்தை அதிகப் படுத்தல்—நிதி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 106-வது விதியின் கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை இப்போது அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாநில ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், மாநில ஓய்வூதியம் மட்டும் பெற தகுதி படைத்தவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ. 100 ஆகவும், மத்திய , மாநில ஓய்வூதியம் இரண்டும் பெற தகுதி படைத்தவர்களுக்கு மாதாந்திரம் ஓய்வூதியத் தொகை ரூ. 75 ஆகவும் இப்பொழுது இருந்து வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் சிரம நிலையைப் பரிவுடன் கருத்தில் கொண்டு இவர்கள் பெற்று வரும் மாநில ஓய்வூதியத் தொகையை அதிகப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி மாநில ஓய்வூதியம் மட்டும் பெற

தகுதி படைத்தவர்களுக்கு ரூ. 100-லிருந்து ரூ. 150 ஆகவும் மத்திய, மாநில இரண்டு ஒய்வூதியமும் பெற தகுதி படைத்த வர்களுக்கு ரூ. 75-லிருந்து ரூ. 100 ஆகவும் 25—1—1981 முதல் உயர்த்தப்படுகிறது. இதனால் ஒரு ஆண்டுக்கு அரசுக்கு கூடுதலாக ரூ. 50 இலட்சம் (சுமாராக) செலவாகும்.

விடுதலைப் போராட்ட ஒய்வூதியம் பெறுவோர்கள் குறைந்த பட்சம் 3 மாத சிறை தண்டனை அனுபவித்திருக்க வேண்டும் என்பதற்கு பதிலாக 1 மாத சிறை தண்டனை அனுபவித்திருந் தாலே போதுமென்று 1–4–1980 அன்று தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. அதன் அடிப்படையில் அநேக மனுக்கள் அரசுக்கு வந்து அவை விசாரிக்கப்பட்டு ஆணையிடப்படும் நாளிலிருந்து ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனை 1—4—1980-லிருந்தே முன் தேதியிட்டு வழங்க வேண்டும் என்று விடுதலைப் போராட்ட ஒய்வூதியம் பெறுவோரின் கோரிக் கையை அரசு பரிவுடன் ஏற்று 1–4–1980 ஆம் தேதியி லிருந்தே ஒய்வூதியம் வழங்கப்பட அரசு முடிவு செய்துள்ளது. இந்த சலுகைகளை இந்தப் பேரவை உறுப்பினர்களும் விடு தலைப் போராட்ட வீரர்களும் மனமார வரவேற்பர் என நம்புகிறேன். (கைதட்டல்).

[பிற்பகல் 1-00]

7. ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானம் விவாதம்—(தொடர்ச்சி)

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: வணக்கத்திற் குரிய சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களு டைய உரையிலே நல்லவைகளைப் பாராட்டியும், குறைகளைச் சுட்டிக்காட்டவும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்களிலே மிகப்பெரும்பான்மையோர் பஸ்களிலே பயணம் செய்கின்றவர்கள்தான். எனவே அவர்கள் சாதாரண ஏழை எளிய மக்களோடு தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தால், ஏழை எளிய மக்கள் என்ன பிரச்சனைகளை எழுப்புகிறார்கள் என்பதை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அமைச்சர் பெருமக்கள் நான் கூறுகின்ற குற்றச்சாட்டுகளைக் கண்டு என்மீது குறைபட்டுக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமா னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாமன்றத்திலே ஒரு